

வெள்ளி உரை

2023/6/23 م — ٥/١٢/١٤٤٤هـ



கலாநிதி அஷ்ஷேய்க்

அப்துல் முஹ்ஸின் பின் முஹம்மத் அல்காஸிம்

மஸ்ஜித் நபவிய்யின் கதீப் மற்றும் இமாம்

தலைப்பு

துல்ஹஜ் மாதத்தின் முதல் பத்து நாட்களில் செய்யப்பட வேண்டிய வணக்கங்கள்

a-alqasim.com

துல்ஹஜ் மாதத்தின் முதல் பத்து நாட்களில் செய்யப்பட வேண்டிய வணக்கங்கள்;[1]

أعْمَالُ عَشْرِ ذِي الحِجَّةِ

إنَّ الحمدَ للَّه، نحمده ونستعينه ونستغفره، ونعوذ باللَّه من شرور أنفسنا ومن سيِّئات أعمالنا، مَنْ يَهده اللَّه فلا مُضِلَّ له، ومن يُضلِلْ فلا هاديَ له، وأشهد أن لا إله إلَّا اللَّهُ وحده لا شريك له، وأشهد أنَّ محمداً عبدُه ورسوله، صلَّى اللَّه عليه وعلى آله وأصحابه وسلَّم تسليماً كثيرا.

புகழனைத்தும் அல்லாஹ்வுக்கே. அவனைப் புகழ்கின்றோம், அவனிடம் உதவிதேடுகின்றோம், மேலும் அவனிடம் பாவமன்னிப்பும் தேடுகின்றோம். அல்லாஹ்விடம் எமது கெடுதிகளிலிருந்தும், எமது கெட்ட செயல்களிலிருந்தும் பாதுகாப்புத் தேடுகின்றோம். மேலும் அல்லாஹ் தனித்தவன், இணைதுணையற்றவன் என்றும், முஹம்மத் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் அல்லாஹ்வின் தூதர் என்றும் அடியார் என்றும் சாட்சிபகர்கின்றேன்.

அல்லாஹ், அவர்கள் மீதும் அவர்களின் தோழர்கள் மற்றும் அவர்களின் உறவினர்கள் மீதும் அதிகமாக ஸலாத்தும் ஸலாமும் சொல்லியருள்வானாக.

அல்லாஹ்வின் அடியார்களே! அல்லாஹ்வை உரியமுறையில் பயந்துகொள்ளுங்கள், இரகசிய மற்றும் பரகசிய நிலையிலும் அவனது கண்காணிப்பின் கீழ் இருங்கள்.

அல்லாஹ் தனது அடியார்களுக்கு செய்த அருளின் காரணமாக நன்மைகளை ஈட்டி தரக்கூடிய காலங்கள் வந்து கொண்டே இருக்கின்றன, ஒரு கிரிகை முடிய இன்னொரு வணக்கம்

---

[1] - அல் மஸ்ஜிதுந்நபவியில் 05-12-1444 (23-06-2023) அன்று நிகழ்த்தப்பட்ட ஜுமுஆ உரை

▪மூலம்: கலாநிதி அப்துல் முஹ்ஸின் பின் முஹம்மத் அல்காஸிம்

ஆரம்பிக்கின்றது; அதன் மூலமாக அவர்களது உடலை சுத்தம் செய்து அவர்களது தரத்தையும் உயர்த்திக் கொள்ள முடியும்.

பரக்கத்து பொருந்திய பத்து நாட்கள் எம்மை வந்தடைந்துள்ளன, அவை மிகச்சிறந்த மிக கண்ணியமான மிக மகத்தான நாட்களாகும், அல்லாஹ் அவற்றின் மீது சத்தியம் செய்துள்ளான்.

﴿وَٱلۡفَجۡرِ ۝ وَلَيَالٍ عَشۡرٖ﴾

89:1. 2 விடியற் காலையின் மீது சத்தியமாக, பத்து இரவுகளின் மீது சத்தியமாக,

"இதை துல்ஹஜ் மாதத்தின் 10 நாட்களாகும், வருடத்தின் மிகச் சிறந்த நாட்கள்" என இமாம் மஸ்ரூக் (ரஹிமஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள். அவை அல்லாஹ்வினால் புண்ணியப்படுத்தப்பட்ட நாட்களில் சிலதாகும்.

﴿ ٱلۡحَجُّ أَشۡهُرٞ مَّعۡلُومَٰتٞۚ ﴾

2:197. (ஹஜ்ஜுக்குரிய காலம் குறிப்பிடப்பட்ட மாதங்களாகும்) என்று அல்லாஹ் கூறிய குறிப்பிட்ட சில மாதங்களின் கடைசியும் இதுவாகும். "புண்ணியப்படுத்தப்பட்ட மாதங்களில் அல்லாஹ்வுக்கு மிக விருப்பத்திற்குரிய மாதம் துல்ஹஜ் ஆகும், இன்னும் துல்ஹஜ் மாதத்தில் அல்லாஹ்வுக்கு மிக விருப்பத்திற்குரியது அதன் முதல் பத்து நாட்களாகும்" என கஃப் (ரஹிமஹுல்லாஹ்) அவர்கள் கூறினார். அவற்றின் பகல் நேரம் ரமழானின் இறுதி பத்தின் பகல் நேரத்தை விட சிறந்ததாகும்:

قال (صلى الله عليه وسلم) : «أَفْضَلُ أَيَّامِ الدُّنْيَا: أَيَّامُ العَشْرِ»

"இவ்வுலக நாட்களில் மிகச்சிறந்த நாட்கள் இந்த பத்து நாட்களாகும்" என நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறினார்கள் (ஆதாரம்: இப்னு ஹிப்பான்) "துல்ஹஜ் மாதத்தின் பத்து நாட்களின் பகல் ரமலான் மாதத்தின் 10 நாட்களின் பகல் பொழுதை விட சிறந்ததாகும், ரமலான் மாதத்தின் கடைசி 10 இரவுகள் துல்ஹஜ்

மாதத்தின் 10 நாட்களில் இரவுகளை விட சிறந்ததாகும்" என ஷைஹுல் இஸ்லாம் இப்னு தைமிய்யா (ரஹிமஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்.

துல்ஹஜ் மாதத்தின் 10 தினங்கள், பிரதானமான வணக்கங்களாகிய தொழுகை, நோன்பு, தர்மம், ஹஜ் ஆகிய வணக்கங்கள் ஒன்று சேர முடியுமாக இருப்பதனாலும் சிறப்புப் பெறுகின்றன. ஏனெனில் அவை வேறு காலங்களில் ஒன்று சேர முடியாது.

சில இரவுகளும் இன்னும் சில பகல் பொழுதுகளும் சிறப்பு பெறுவது அவற்றை நற்காரியங்களுக்கு பயன்படுத்திக் கொள்ள தூண்டுவதாக அமைகின்றது. நல்ல அமல்களை அதிகமாக செய்வது இப்பத்து நாட்களை பயன்படுத்திக் கொள்வதற்கான வழியாகும்; ஏனெனில் இப்பத்து நாட்களில் செய்யப்படும் நல்ல அமல், வேறு காலங்களில் செய்யப்படும் நல்ல அமலை விட அல்லாஹ்வுக்கு மிக விருப்பத்திற்குரியது.

«مَا العَمَلُ فِي أَيَّامٍ أَفْضَلَ مِنَ العَمَلِ فِي هَذِهِ»

"எந்நாட்களில் செய்யப்படும் அமலும் இந்நாட்களில் செய்யப்படும் அமலை விடச் சிறந்ததாக இருக்காது" என்று கூறவே "ஜிஹாதை விடவுமா?!" என நபித்தோழர்கள் வினவ: "ஜிஹாதை விடவும் தான்இ ஆனாலும் தனது உயிரையும் பணத்தையும் பனையம் வைத்து அல்லாஹ்வின் பாதையில் சென்று திரும்பி வராத மனிதர் அதில் விதிவிலக்கானவராவார்" என்ன நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறினார்கள் (ஆதாரம்: புகாரி) "துல்ஹஜ் மாதத்தின் முதல் பத்து நாட்களில் செய்யப்படும் நற்கிரிகைகள் இனிய உலக நாட்களில் செய்யப்படும் நற்கிரிகைகளை விட அல்லாஹ்வுக்கு மிக விருப்பத்திற்குரியவை, அதில் எந்த ஒன்றும் விதிவிலக்கு இல்லை என்பதையே இந்த ஹதீஸிலிருந்து விளங்கக் கிடைக்கின்றது" என ரஜப் (ரஹிமஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள். முன் சென்ற நல்லடியார்களாகிய ஸலபுகள் இப்ப பத்து நாட்களில் நற்கிரிகைகள் செய்வதில் தம்மை ஈடுபடுத்திக் கொள்வதில் முற்போக்காக

இருந்திருக்கின்றனர். "துல்ஹஜ் மாதத்தின் முதல் பத்து நாட்கள் வந்து விட்டால் ஸஈத் பின் ஜுபைர் (ரஹிமஹுல்லாஹ்) அவர்கள் அடுத்தவர்கள் சக்தி பெறாத அளவுக்கு வணக்கங்களில் ஈடுபடுவதில் முயற்சிப்பவராக இருந்திருக்கின்றார்.

இப்பத்து நாட்களில் நிறைவேற்றப்படும் வணக்கங்கள் பலதரப்பட்டவையாக இருப்பது அல்லாஹ்வின் அருளாகும். அல்லாஹ்வை அதிகமாக நினைவு கூறுவது இப்ப பத்து நாட்களில் நிறைவேற்றும் படி ஏவப்பட்ட விடயங்களில் ஒன்றாகும்:

﴿ وَيَذۡكُرُواْ ٱسۡمَ ٱللَّهِ فِيٓ أَيَّامٖ مَّعۡلُومَٰتٍ ﴾

22:28. (குறிப்பிட்ட நாட்களில் அல்லாஹ்வின் பெயரைச் சொல்(லி குர்பான் கொடுப்)பவர்களாகவும் (வருவார்கள்); என அல்லாஹ் கூறுகின்றான்.) "அவை துல்ஹஜ் மாதத்தின் 10 நாட்களே ஆகும்" என இப்னு அப்பாஸ் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் கூறினார்கள். இந்நாட்களில் அல்லாஹ்வை நினைவு கூறுவது மிகச்சிறந்த வணக்கமாகும்.

قال النَّبِيُّ)صلى الله عليه وسلم(«مَا مِنْ أَيَّامٍ أعْظَمُ عِنْدَ اللَّهِ وَلَا أَحَبُّ إِلَيْهِ مِنَ العَمَلِ :
فِيهِنَّ مِنْ هَذِهِ العَشْرِ؛ فَأَكْثِرُوا فِيهِنَّ مِنَ التَّهْلِيلِ وَالتَّكْبِيرِ وَالتَّحْمِيدِ»

"வேறு எந்த நாட்களில் செய்யப்படும் அமல்களை விட இப்ப 10 நாட்களில் செய்யப்படுகின்ற அமல்களே அல்லாஹ்வுக்கு மிக விருப்பத்திற்குரியதும் இன்னும் மிக மகத்தானதுமாகும்இ ஆகவே அந்நாட்களில்: லா இலாஹ இல்லல்லாஹ், அல்லாஹு அக்பர், அல்ஹம்துலில்லாஹ் என்று அதிகமாக கூறுங்கள்" என நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறினார்கள் (ஆதாரம்: அஹ்மத்) "இப்பத்து நாட்களிலும் அடுத்த நாட்களை விட அதிகமாக திக்ர்களில் ஈடுபடுவது விரும்பத்தக்கதாகும்இ இன்னும் இப்பத்து நாட்களில் அரஃபா நாளில் அடுத்த நாட்களை விட அதிகமாக திக்ரில் ஈடுபடுவதும் விரும்பத்தக்கதாகும். அல்குர்ஆனை ஓதுவது மிகச்சிறந்த திக்ராகும்இ அதுவே நேர் வழியும் பிரகாசமுமாகும்.

எல்லா நேரங்களிலும் அல்லாஹு அக்பர் என்று (அத்தக்பீருல் முத்தக்) தக்பீர் சொல்வது துல்ஹஜ் மாதத்தின் அடையாளங்களில் ஒன்றாகும், இப்னு உமர், அபூ ஹுரைரா (ரழியல்லாஹு அன்ஹுமா) ஆகிய இருவரும் இப்பத்து நாட்களிலும் கடைத்தெருவுகளுக்கு சென்று தக்பீர் சொல்வார்கள், அவ்விருவரும் தக்பீர் சொல்வதைக் கேட்கும் மக்களும் தக்பீர் சொல்வார்கள் (ஆதாரம்: புஹாரி) அரபா தினத்தின் பஜ்ரிலிருந்து ஐயாமுத் தஷ்ரீக் நாட்களின் இறுதி நாள் அஸர் வரைக்கும் ஹஜ் செய்கின்றவர்களும் அடுத்தவர்களும் தக்பீர் (அத்தக்பீருல் முகய்யத்) கூறுவது சுன்னாவாகும்.

தர்மம் ஒரு நற்செயலாகும், அதன்மூலம் கஷ்டங்களும் கவலைகளும் நீங்கி விடுகின்றன, அது தேவைகளின் போதும் நற்காலங்களிலும் நிறைவேற்றப்படுகின்ற போது மிகச் சிறந்ததாக மாறிவிடுகின்றது.

قال النَّبِيُّ (صلى الله عليه وسلم): «السَّاعِي عَلَى الأَرْمَلَةِ وَالمِسْكِينِ؛ كَالمُجَاهِدِ فِي سَبِيلِ اللهِ - وَأَحْسَبُهُ قَالَ - وَكَالقَائِمِ لَا يَفْتُرُ، وَكَالصَّائِمِ لَا يُفْطِرُ» (متفق عليه).

"ஏழைகளுக்கும் விதவைகளுக்கும் உதவுகின்றவர் அல்லாஹ்வின் பாதையில் போர் செய்கின்றவர், . . . விடாது நின்று வணங்குபவர் மற்றும் தொடர்ச்சியாக நோன்பு நோற்பவரைப் போன்றவார்" என்ன நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறினார்கள் (ஆதாரம்: புகாரி முஸ்லிம்)

முதல் ஒன்பது நாட்களில் நோன்பு நோற்பதும் இப் பத்து நாட்களில் செய்யப்படக்கூடிய அமல்களில் விரும்பத்தக்க ஓர் அமலாவும். "அது மிக விரும்பத்தக்க ஒரு அமலாகும்" என இமாம் நவவி (ரஹிமஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள். அரபா தினத்தில் நோன்பு நோற்பது, முன் சென்ற, பின் வரக்கூடிய இரு வருடத்தின் பாவங்களுக்கான பரிகாரமாகும் (ஆதாரம்: முஸ்லிம்) ஹஜ் செய்கின்றவர், நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களின் வழிமுறைக்கு ஏற்பவும், பிரார்த்தனைகள் மற்றும் வணக்கங்களில் ஈடுபடுவதற்காக சக்தியை பாதுகாத்துக் கொள்வதற்காக இன்னோன்பை நோற்காதிருப்பதே மிகச் சிறந்தது.

அரபா தினம் முஸ்லிம்கள் ஒன்றிணைக்க கூடிய தினமாகும், இன்னும் ஆதரவின், பணிவின் தினமுமாகும், இன்னும் முஸ்லிம்களின் மீது அருள் சொரியப்படும் தினமுமாகும்: "அல்லாஹ் அரஃபா தினத்தில் தான் அதிகமான அடியார்களை நரகிலிருந்து விடுதலை செய்கின்றான்" (ஆதாரம்: முஸ்லிம்) "அரஃபா தின மாலைப் பொழுதில் ஹாஜிகளின் உள்ளத்தில் அவர்களால் கூற முடியாத அளவுக்கு அருளும் பிரகாசமும் அன்பும் (ஈமானும்) விசுவாசமும் இறங்குகின்றன" என ஷைஹுல் இஸ்லாம் இப்னு தைமிய்யா (ரஹிமஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்.

பிரார்த்தனை மகத்தான உயர்ந்த இடத்தை உடைய ஒரு வணக்கமாகும், ஒரு அடியான் இவ்வணக்கத்தின் போது அவனது எஜமானிடம் தனது தேவைகளை முறையிட்டு அவனது அருளைக் கேட்கின்றான்:

﴿ فَٱدۡعُواْ ٱللَّهَ مُخۡلِصِينَ لَهُ ٱلدِّينَ ﴾

40:14. (நீங்கள் முற்றிலும் அவனுக்கே வழிபட்டு மார்க்கத்தில் பரிசுத்தத்துடன் அல்லாஹ் ஒருவனையே (பிரார்த்தித்து) அழையுங்கள்) என்ற அல்லாஹ்வின் கட்டளைக்கு அடிபணிந்து அவனது உள்ளத்தால் அல்லாஹ்வின் பால் முன்னோக்குகின்றான்; ஆகவே அரபா தினத்திலும் அடுத்த தினங்களிலும் அவனின் பால் உனது தேவைகளை முறையிட்டு உனது கஷ்டங்களையும் முன்வை, உனது கேள்விக்கான பதில் வரும் என்று உறுதியாக நம்பு அந்த தயாளனிடம் உனது வேண்டுதல்களை உருக்கமாக முன்பை அவனை சகலதையும் படைப்பவனும் அறிந்தவனுமாக இருக்கின்றான்:

﴿ إِنَّمَآ أَمۡرُهُۥٓ إِذَآ أَرَادَ شَيۡـًٔا أَن يَقُولَ لَهُۥ كُن فَيَكُونُ ﴾

36:82. (எப்பொருளையேனும் அவன் (படைக்க) நாடினால், அதற்கு அவன் கட்டளையிடுவதெல்லாம்; "குன்" (ஆய்விடுக) என்று கூறுவதுதான்; உடனே அது ஆகிவிடுகிறது.) என்று அல்லாஹ் கூறுகின்றான். "அரபா தினத்தில் கேட்கப்படும் பிரார்த்தனைகள் அனைத்தும் பெரும்பாலும் ஏற்றுக்கொள்ளப்படும்" என இப்னு அப்தில் பர் (ரஹிமஹுல்லாஹ்) அவர்கள் கூறுகின்றார்கள்.

துல்ஹஜ் மாதத்தின் முதல் பத்து நாட்களில் (யவ்முன் நஹ்ர்) அறுத்து பலியிடும் நாள் உள்ளதுஇ அது அல்லாஹ்விடத்தில் மிக கண்ணியத்துக்குரிய நாளாகும், "அல்லாஹ்விடத்தில் மிக மகத்தான நாள் (யவ்முன் நஹ்ர்) அறுத்து பலியிடும் நாளாகும்" என நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறினார்கள் (ஆதாரம்: அபூ தாவூத்) அது அல்லாஹ்விடத்தில் மிக கண்ணியம் பொருந்திய நாளாகும், நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் ஹஜ்ஜத்துல் வதாஃவின் போது, (யவ்முன் நஹ்ர்) அன்று நிகழ்த்திய பிரசங்கத்தில்: "இன்றைய தினமே நாட்களில் மிக மகத்தான தினம், இன்னும் இந்த மாதமே மாதங்களில் மிக மகத்தான மாதம்" என்று கூறினார்கள். (ஆதாரம்: அஹ்மத்) மற்றும் இந்த தினம் முஸ்லிம்களின் இரு பெருநாள் தினங்களில் ஒன்றாகும், அது இஸ்லாத்தின் கடமைகள் ஓர் கடமையை நிறைவேற்றியமைக்காக மகிழ்ச்சியுறுகின்ற ஒரு நாளாகும். இத்தினம் ஹஜ் கிரிகைக்குரிய தினங்களில் மிகச்சிறந்த தினமாகும்இ மனிதர்கள் அதிகமாக ஒன்று சேரக்கூடிய தினமும் அதுவே, இன்னும் அதுவே மிகப் பெரும் ஹஜ்ஜின் தினமாகும்:

﴿ وَأَذَٰنٌ مِّنَ ٱللَّهِ وَرَسُولِهِۦٓ إِلَى ٱلنَّاسِ يَوۡمَ ٱلۡحَجِّ ٱلۡأَكۡبَرِ ﴾

9:3. (அல்லாஹ்வும், அவனுடைய தூதரும் இணைவைத்து வணங்குபவர்களுடன் (செய்திருந்த உடன்படிக்கையில்) இருந்து நிச்சயமாக விலகிக் கொண்டார்கள் என்ற விஷயத்தை இம்மாபெரும் ஹஜ்ஜுடைய நாளில் அல்லாஹ்வும், அவனுடைய தூதரும் மக்களுக்குப் பகிரங்கமாக அறிவிக்கின்றனர்.) என்று அல்லாஹ் கூறுகின்றான்.

யவ்முன் நஹ்ரில்தான் அல்லாஹ் தனது நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களுக்கும் விசுவாசிகளுக்கும், தான் அவர்களுக்கான மார்க்கத்தை பூரணப்படுத்தி விட்டதாகவும் இதற்குப் பிறகு கூட்டுவதற்கான எந்தத் தேவையும் இல்லை என்றும் அறிவித்து அதை ஏற்றுக் கொண்டான், அதை ஒருபோதும் வெறுக்கவே மாட்டான்:

﴿ ٱلْيَوْمَ أَكْمَلْتُ لَكُمْ دِينَكُمْ وَأَتْمَمْتُ عَلَيْكُمْ نِعْمَتِي وَرَضِيتُ لَكُمُ ٱلْإِسْلَٰمَ دِينًا ﴾

5:3. (இன்றைய தினம் நாம் உங்களுக்கு உங்களுடைய மார்க்கத்தை முழுமையாக்கி வைத்து என்னுடைய அருளையும் உங்கள் மீது முழுமையாக்கி வைத்து விட்டோம். உங்களுடைய இந்த இஸ்லாம் மார்க்கத்தைப் பற்றியும் திருப்தியடைந்தோம். (அங்கீகரித்துக் கொண்டோம்) "இது இந்த சமூகத்துக்கு அல்லாஹ் சொரிந்த மிகப்பெரும் அருட்கொடையாகும், அல்லாஹ் அவர்களுக்கு அவர்களது மார்க்கத்தை பரிபூரணப்படுத்தியுள்ளான், ஆகவே அவர்களுக்கு வேறு எந்த மார்க்கமும் தேவையில்லை, அவர்களது நபி தவிர்ந்த வேறு எந்த நபியும் தேவையில்லை" என இப்னு கஸீர் (ரஹிமஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்.

மறுமை நாளில் அல்லா எல்லா நபிமார்களிடமும் அவர்கள் அவர்களது சமூகத்திற்கான தூதை எற்றவைத்ததைப் பற்றி கேட்கப்படுவார்கள்: "நீங்கள் என்னைப் பற்றி கேட்கப்படுவீர்கள்" என்ன நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறினார்கள் (ஆதாரம்: முஸ்லிம்) யவ்முன் நஹ்ரில்தான் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் சஹாபாக்களிடம்: "நான் வெற்றி வைத்தேனா?" என்று கேட்க: "ஆம்" என்றார்கள், அதற்கு: "அல்லாஹ்வே நீ சாட்சியாக இரு" என்று கூறினார்கள் (ஆதாரம்: புகாரி, முஸ்லிம்)

அத்தினத்தில் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள், தனது சமூகத்தினருக்கு: மனிதர்களுக்கு மார்க்கத்தை ஏற்றி வையுங்கள் என்று உபதேசித்தார்கள்: "இங்கே சமூகமளித்துள்ளவர்கள் சமூகமளிக்காதவர்களுக்கு எற்றி வையுங்கள்; ஏனெனில் உங்களால் எற்றி வைக்கப்படுகின்றவர்கள் என்னிரமிருந்து செய்தியை கேட்டவரை விட மிக உள்வாங்க கூடியவராக இருக்கலாம்" என கூறினார்கள் (ஆதாரம்: புகாரி, முஸ்லிம்) "மனிதர்களுக்கு நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களின் ஹதீஸ்களையும் மார்க்க கலைகளையும் கற்றுக் கொடுப்பதற்கான ஒரு தூண்டுதலே இதுவாகும், கற்றல் மற்றும் கற்றுக் கொடுத்தல் செயற்பாடுகள்

இல்லாமலிருந்தால் மனிதர்களுக்கு அறிவு சென்று சேர்ந்திருக்காது" என முழ்ஹிரி (ரஹிமஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்.

மனிதர்கள் பெருநாள் தினத்தில் மகிழ்ச்சியாக இருக்கின்ற போது, அவர்களின் சிலர் அல்லாஹ்வை நினைவு கூறுவதை விட்டும் பொடுபோக்காக இருந்து விடுகின்றனர்:

﴿ وَٱذۡكُرُواْ ٱللَّهَ فِيٓ أَيَّامٖ مَّعۡدُودَٰتٖۚ ﴾

2:203. (நம்பிக்கையாளர்களே! துல்ஹஜ்ஜு மாதத்தில்) குறிப்பிடப்பட்ட நாள்கள் வரை அல்லாஹ்வை "திக்ரு" செய்யுங்கள்.) என்று அல்லாஹ் கூறுகின்றான்: "(குறிப்பிட்ட தினங்கள்) எனக் குறிப்பிடப்பட்டுள்ள தினங்களின் மூலமாக: பெருநாள் தினத்தை தொடர்ந்து வரக்கூடிய (அய்யாமுத் தஷ்ரீக்) என்று அழைக்கப்படக்கூடிய மூன்று நாட்களுமே நாடப்படுகின்றன" என இப்னு அப்பாஸ் (ரலியல்லாஹு அன்ஹுமா) அவர்கள் கூறுகின்றார். "அய்யாமுத் தஷ்ரீக் தினங்கள் உண்பதற்கும் குடிப்பதற்கும் அல்லாஹ்வை நினைவு கூர்வதற்குமுரிய நாட்களாகும்" என நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறினார்கள். (ஆதாரம்: முஸ்லிம்) "துல்ஹஜ் மாதத்தின் முதல் பத்து நாட்களுக்கான சிறப்பு உறுதிப்படுத்தப்பட்டுள்ளதுஇ அதன் அடிப்படையில் அய்யாமுத் தஷ்ரீக் தினங்களுக்குரிய சிறப்பும் உறுதிப்படுத்தப்படுகின்றது" என இப்னு ஹஜர் (ரஹிமஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள். யவ்முன் நஹ்ர் மற்றும் அய்யாமுத் தஷ்ரீக் தினங்களில் உடலுடன் மற்றும் பணத்துடன் தொடர்புடைய வணக்கங்கள் இருக்கின்றனஇ அவை அல்லாஹ்வுக்கு மிக விருப்பத்திற்குரியவை, அல்லாஹ் அவற்றை தொழுகையுடன் இணைத்துக் கூறுகின்றான்:

﴿ فَصَلِّ لِرَبِّكَ وَٱنۡحَرۡ ﴾

108:2. (எனவே, உம் இறைவனுக்கு நீர் தொழுது, குர்பானியும் கொடுப்பீராக.) அல்லாஹ், அறத்து பலியிடும் போது உளத்தூய்மையை பேணும்படி ஆர்வமூட்டுகின்றான், அச்சந்தர்ப்பத்தில் அல்லாஹ்வின்

முகம் மாத்திரமே நடப்பட வேண்டும், எருமையோ முகஸ்துதியோ சம்பிரதாய எண்ணமோ இருக்க கூடாது,

﴿ لَن يَنَالَ ٱللَّهَ لُحُومُهَا وَلَا دِمَآؤُهَا وَلَٰكِن يَنَالُهُ ٱلتَّقْوَىٰ مِنكُمْ ﴾

22:37. (எனினும்), குர்பானியின் மாமிசங்களோ, அவற்றின் உதிரங்களோ அல்லாஹ்வை ஒரு போதும் அடைவதில்லை; ஆனால் உங்களுடைய தக்வா (பயபக்தி) தான் அவனை அடையும்) என்று அல்லாஹ் கூறுகின்றான்.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் இரண்டு கருத்த கொம்புகள் உள்ள ஆடுகளை உழ்ஹிய்யா கொடுத்தார்கள், அவை இரண்டையும் அவர்களது கையினாலே அறுத்தார்கள் (ஆதாரம்: புகாரி முஸ்லிம்)

விலைமதிப்பு பெற்ற மனதுக்கு மிகத் திருப்திகரமான கால்நடைகளே உழ்ஹிய்யாவுக்கு மிக உகந்ததாகும், ஓர் ஆடு ஒருவருக்கும் அவரது குடும்பத்தவருக்கும் சேர்த்து போதுமானதாகும், ஒருவர் கடன் பெற்று உழ்ஹிய்யா கடமையை நிறைவேற்ற அனுமதிக்கப்படுவார், அதற்கான கூலியை அவர் அல்லாஹ்விடம் எதிர்பார்க்க வேண்டும், அதன் விலை அதிகமாக இருக்கின்றது என்று அலட்டிக் கொள்ளக் கூடாது; ஏனெனில் அதற்கான கூலி அல்லாஹ்விடத்தில் மகத்தானது; ஆகவே மனம் விரும்பி அதை நிறைவேற்றுங்கள் நீங்களும் சாப்பிட்டு அடுத்தவர்களுக்கும் கொடுங்கள் தர்மம் செய்யுங்கள், உங்களது தர்மத்தை ஏழைகளுக்கு கொண்டு சேர்த்து விடுங்கள், உங்களது அன்பளிப்புகளை உங்களது குடும்பத்தவர்களுக்கும் பக்கத்து வீட்டவர்களுக்கும் கொடுங்கள்.

யார் உழ்ஹிய்யா கடமையை நிறைவேற்ற நாடுகின்றாரோ அவர் இப்பத்து நாட்களில் அவரது முடிகளையோ நகங்களையும் வெட்டுவதற்கு அனுமதிக்கப்பட மாட்டார்: "யாரிடம் அறுப்பு பிராணி இருக்கின்றதோ அவர் அதை அறுத்துப் பலியிடட்டும், துல்ஹஜ் மாதத்தின் பிறை தென்பட்டு விட்டால் உழ்ஹிய்யா கடமையை நிறைவேற்றும் வரை அவர் அவரது முடியயோ நகங்களையோ வெட்ட

வேண்டாம் என நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறினார்கள் (ஆதாரம்: முஸ்லிம்)

நல்ல காலங்களில் பாவங்கள் செய்யப்படுகின்ற போது அதன் ஆபத்து கடுமையாகின்றது:

﴿ إِنَّ عِدَّةَ ٱلشُّهُورِ عِندَ ٱللَّهِ ٱثۡنَا عَشَرَ شَهۡرٗا فِي كِتَٰبِ ٱللَّهِ يَوۡمَ خَلَقَ ٱلسَّمَٰوَٰتِ وَٱلۡأَرۡضَ مِنۡهَآ أَرۡبَعَةٌ حُرُمٞۚ ذَٰلِكَ ٱلدِّينُ ٱلۡقَيِّمُۚ فَلَا تَظۡلِمُواْ فِيهِنَّ أَنفُسَكُمۡ ﴾

9:36. (நிச்சயமாக அல்லாஹ்விடத்தில் அல்லாஹ்வுடைய (பதிவுப்) புத்தகத்தில் வானங்களையும் பூமியையும் படைத்த நாளிலிருந்தே மாதங்களின் எண்ணிக்கை பன்னிரண்டு ஆகும் - அவற்றில் நான்கு (மாதங்கள்) புனிதமானவை; இது தான் நேரான மார்க்கமாகும் - ஆகவே அம்மாதங்களில் (போர் செய்து) உங்களுக்கு நீங்களே தீங்கிழைத்துக் கொள்ளாதீர்கள்) என அல்லாஹ் கூறுகின்றான்: "பாவம் எக்காலத்தில் செய்யப்பட்டாலும் கடுமையானதாக இருந்தாலும் கூட, புண்ணியப்படுத்தப்பட்ட மாதங்களில் அது செய்யப்படுகின்ற போது அடுத்த காலங்களில் செய்யப்படும் பாவங்களை விட மிகக் கடுமையான தவறாகவும் பாவமாகவும் அது கருதப்படுகின்றது, அல்லாஹ் தான் நாடியவற்றை மகிமைப்படுத்துகின்றான்" என கதாதா (ரஹிமஹுல்லாஹ்) அவர்கள் கூறுகின்றார்

முஸ்லிம்களே,

யார் நல்ல நேரங்களையும் நாட்களையும் மாதங்களையும் நல்ல முறையில் பயன்படுத்தி, அக்காலங்களில் வணக்கங்களில் ஈடுபட்டு அல்லாஹ்வின் பால் நெருங்குகின்றாரோ அவரே சிறந்தவர்,

أعُوْذُ بِاللهِ مِنَ الشَّيْطَانِ الرَّجِيْمِ

﴿ سَابِقُوٓاْ إِلَىٰ مَغۡفِرَةٖ مِّن رَّبِّكُمۡ وَجَنَّةٍ عَرۡضُهَا كَعَرۡضِ ٱلسَّمَآءِ وَٱلۡأَرۡضِ أُعِدَّتۡ لِلَّذِينَ ءَامَنُواْ بِٱللَّهِ وَرُسُلِهِۦۚ ذَٰلِكَ فَضۡلُ ٱللَّهِ يُؤۡتِيهِ مَن يَشَآءُۚ وَٱللَّهُ ذُو ٱلۡفَضۡلِ ٱلۡعَظِيمِ ﴾

57:21. உங்கள் இறைவனின் மன்னிப்பிற்கும் சுவர்க்கத்திற்கும் நீங்கள் முந்துங்கள்; அச்சுவர்க்கத்தின் பரப்பு, வானத்தினுடையவும், பூமியினுடையவும் பரப்பைப் போன்றதாகும்; எவர்கள் அல்லாஹ்வின் மீதும், அவன் தூதர் மீதும் ஈமான் கொள்கிறார்களோ, அவர்களுக்கு அது சித்தம் செய்து வைக்கப்பட்டிருக்கிறது. அது அல்லாஹ்வுடைய கிருபையாகும் - அதனை அவன் நாடியவருக்கு அளிக்கின்றான். இன்னும், அல்லாஹ் மகத்தான கிருபையுடையவன்.

இரண்டாவது உரை

الحمد لله على إحسانه، والشكر له على توفيقه وامتنانه، وأشهد أن لا إله إلا الله وحده لا شريك له تعظيما لشأنه، وأشهد أن نبينا محمداً عبده ورسوله، صلى الله عليه وعلى آله وأصحابه وسلم تسليماً مزيداً.

முஸ்லிம்களே,

இஸ்லாம் (தௌபா) பாவமீட்சிக்கு ஓர் உயர்ந்த இடத்தை வைத்திருக்கின்றது, அல்லாஹ் எல்லோரின் மீதும் எல்லா பாவங்களிலிருந்தும் பாவமீட்சி பெறுவதை கடமையாக்கி இருக்கின்றான், அல்லாஹ்வுக்கு மனைவி குழந்தை இருக்கின்றனர் என்று வாதித்தவர்களுக்கு அவன்:

﴿ أَفَلَا يَتُوبُونَ إِلَى ٱللَّهِ وَيَسۡتَغۡفِرُونَهُۥ ﴾

5:74. இவர்கள் அல்லாஹ்வின் பக்கம் திரும்பி தவ்பா செய்து, அவனிடம் மன்னிப்புத் தேடமாட்டார்களா? என்று கூறுகின்றான். இன்னும் விசுவாசிகளை பார்த்து:

﴿ وَتُوبُوٓاْ إِلَى ٱللَّهِ جَمِيعًا أَيُّهَ ٱلۡمُؤۡمِنُونَ لَعَلَّكُمۡ تُفۡلِحُونَ ﴾

24:31. (முஃமின்களே! (இதில் உங்களிடம் ஏதேனும் தவறு நேரிட்டிருப்பின்,) நீங்கள் தவ்பா செய்து (பிழை பொறுக்கத் தேடி), நீங்கள் வெற்றி பெறும் பொருட்டு, நீங்கள் அனைவரும் அல்லாஹ்வின் பக்கம் திரும்புங்கள்.) என்று கூறுகின்றான். நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் ஒரு நாளைக்கு 100 தடவைகள் பாவமீட்சி செய்பவர்களாக இருந்தார்கள்.

"மனிதர்களே, அல்லாஹ்விடம் பாவமீட்சி தேடுங்கள், நான் ஒரு நாளைக்கு 100 தடவைகள் பாவமீட்சி தேடுகிறேன்" என நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறினார்கள் (ஆதாரம்: புகாரி முஸ்லிம்) நாம் பாவ மீட்சியின் பால் மிகத்

தேவையுடையவர்கள், ஓர் அடியான் பாவம் மீட்சி செய்யும் நாளே அவனது மிகச்சிறந்த நாளாகும்: "உனது தாய் உன்னை பெற்றெடுத்த நாள் முதல் நீ கடந்து சென்ற நாட்களிலேயே மிகச் சிறந்த நாள் என்ன நீ மகிழ்ச்சியுரு" என நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கஃப் பின் மாலிக் (ரலியல்லாஹு அன்ஹு) அவர்களுக்கு (அவர் யுத்தத்தில் கலந்து கொள்ளாமல் இருந்து, அதற்கு பாவ மீட்சி கிடைத்த அன்று) கூறினார்கள் (ஆதாரம்: புகாரி முஸ்லிம்) அல்லாஹ்வுக்கு மிக விருப்பத்திற்குரிய நாட்கள் பாவம் மீட்சி பெறுபவர் பாவமீட்சி பெறுவது எவ்வளவு அழகானது! யார் உண்மையாக பாவமீட்சி செய்கின்றாரோ அவரது அந்தஸ்துக்கள் உயரும் இன்னும் அல்லாஹ் அவரது பாவங்களை நன்மைகளாக மாற்றுவான்.



خطبة الجمعة

١٤٤٤/١٢/٥هـ

2023/6/23 م



فضيلة الشيخ

د. عبد المحسن بن محمد القاسم

إمام وخطيب المسجد النبوي الشريف

بعنوان

أعمال عشر ذي الحجة

مترجمة باللغة التاميلية